நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.27.04.2022.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஏப்ரல்–2022ம் அவசர கூட்டம் வருகிற 29.04.2022 தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

27/04/2022

தலைவர்
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

1. தமிழக முதலமைச்சர் அவர்களால் டாக்டர்.அண்ணல் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளினை சமத்துவநாளாக அறிவித்தமைக்கு, மாண்புமிகு.தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கே.என்.நேரு அவர்களுக்கும் நமது ஆத்தூர் மாமன்றத்தில் நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

2. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள தூய்மை பணியாளர்களின் மூலம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளிலும் குப்பைகளை தரம் பிரித்து பிளாஸ்டிக், டி கப் போன்றவற்றை மறுசுழற்சி முறையில் பொருட்களை பேல் செய்து அரியலூர் சிமெண்ட் கம்பெனிக்கு அனுப்புவதற்காக தேவைப்படும் 30 கிலோ கிளிப் மற்றும் 100 ரோல் நாடா தேவைப்படுவதால், அவற்றை வாங்கி வழங்கவும், அதற்கான செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (1001/2022/எச்1).

3. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு குப்பை அகற்றும் பணியில் இருந்த வண்டி எண்.டி.என்–77 ஜெ–6630 என்ற பிளிடோர் ஆட்டோ பழுதடைந்துள்ளதால், அதனை சரி செய்ய மெஸர்ஸ்.கிரிஸ் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் என்ற நிறுவனத்திடம் ரூ.82,523/– (ரூபாய் என்பத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்று மட்டும்) விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பழுதினை சரி செய்ய ஆகும் செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றபொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. பழுதினை சரி செய்யவும், அதற்குரிய செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (1301/2022/எச்1).

4. இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருக்களில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்களை கொண்டு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகின்றது. தற்போது அப்பணிக்கு எடைபோடும் இயந்திரம் முற்றிலும் பழுது அடைந்து செயல்படாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக எடைபோடும் இயந்திரம் ஐந்து பிரிவுகளுக்கும் ஐந்து எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கும், அதறக்கான உத்தேச செலவினம் ரூ.70,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

குப்பைகளை எடைபோடும் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.70,000/– வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (1305/2022/எச்1).

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.27519-18/2021/P2, நாள்.02.03.2022ன்படி இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டத்தின் (2021-22) கீழ் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு பங்களிப்பு தொகை ரூ.12.00 லட்சம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.6.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.18.00 லட்சம் மதிப்பீட்டில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சேலம் கடலூர் மெயின் ரோடு மைய பகுதிகளில் தெருவிளக்கு (LED) அமைத்தல் பணிக்கு 31.03.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றத்தினை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.P&B Enterprises,ஒப்பந்ததாரர்,ஈரோடு. | 0.48% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.J.P. Construction,ஒப்பந்ததாரர், நாமக்கல். | 1.49% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. .இப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.48% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S.P&B Enterprises, ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் , ஏற்கலாம்.( ந.க.எண்.3844/2021/இ1).

6. இந்நகராட்சியில் சொத்துவரி சீராய்வு 01.04.2022 முதல் சீராய்வு செய்வதால் பொதுமக்கள் அறியும் வகையில் தினமணி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ.17,808/— எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) பி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் . (ந.க.எண்.1263/2022/அ1),

7. இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக அரசு வழக்கறிஞர்களுக்கு 2022—2023—ம் ஆண்டிற்கான தோராய கட்டணம் ரூ.1,50,000/— வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு ஓராண்டிற்கு வழக்கு கட்டணம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1565/2022/எப்1).

8. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 செங்காட்டு காலனி பகுதியில் 60—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு மேட்டூர் குடிநீர் வழங்க பகிர்மான குழாய் அமைக்கப்படவில்லை. தற்சமயம் வறட்சி காலத்திற்கு குடிநிர் வழங்க அப்பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் வழங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

9. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 பைத்தூர் ரோடு பகுதியில் உள்ள கிழக்கு முதல் மற்றும் இரண்டு தெருக்களில் 80 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் சில சமயங்களில் அடைப்பு ஏற்படுவதாலும், தண்ணீர் சென்றடையும் தூரம் தொலைவாக இருப்பதாலும், மேற்கண்ட இடத்திற்கு செல்லும் பகிர்மான குழய்யை மாற்றி தெற்கு பகுதியில் உள்ள பகிர்மான குழாயி இணைத்து குடிநீர் வழங்கினால் வறட்சி காலங்களில் தடையில்லா குடிநீர் வழங்க இயலும் என்பதால், பகிர்மான குடிநீர் குழாய் இணைப்பை மாற்றி அமைக்க தோராயமாக ஆகும் செலவின மதிப்பீடு தயார் செய்து ரூ.2,10,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

10. இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (நகர்புறம்) (Swachu Bharath Mission (Urban) 2.0 2021-2022 திட்டத்தின்கீழ் சமுதாய கழிவறை, பொது கழிப்பிடம், தனிநபர் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்ட நகராட்சி பங்களிப்புடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.26 பைத்தூர் சாலையில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி. | 24.00 |
| 2 | வார்டு எண்.31 அம்பேத்கார் நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி | 24.00 |
| 3 | பேருந்து நிலையத்தில் பொது கழிப்பிடம் கட்டுதல் பணி | 35.00 |
| 4 | உழவர் சந்தை பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி | 1.28 |
| | மொத்தம் | 84.28 |

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

11. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 லட்சுமிபுரம் பகுதியில் உள்ள முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு தெரு பகுதியில் உள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள ஜி.ஐ. பைப் மூலமாக தண்ணீர் வழங்கப்பட்டது. தற்சமயம் குழாய்கள் அதிகம் துருபிடித்து, பழுதடைந்தும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. தற்பொழுது வறட்சி காலம் என்பதால் மக்கள் அன்றாட தேவைக்கு தடையில்லா தண்ணீர் வழங்க மேற்கண்ட பகுதியில் பழுதடைந்த குழாய்கள் சரி செய்யவும் மற்றும் குழாய் மாற்றி அமைக்க ஆகும் செலவு ரூ.3,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

12. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் இருந்து மக்கள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் இரும்பு பைப்புகள் பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பைப்புகள் அமைத்து பல வருடங்கள் ஆன நிலையில் தற்பொது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வார்டுகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள ஜி.ஐ. பைப்களை மாற்றி அமைக்க மதிப்பீடு ரூ.7.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

13. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் இருந்து மக்கள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் இரும்பு பைப்புகள் பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பைப்புகள் அமைத்து பல வருடங்கள் ஆன நிலையில் தற்பொது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வார்டுகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள ஜி.ஐ. பைப்களை மாற்றி அமைக்க மதிப்பீடு ரூ.7.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

14. வார்டு எண்.32 வ.உ.சி நகரில் நகராட்சிக்கு சொந்தமான கிணற்றில் தண்ணீர் உள்ளது. தற்போது கோடை காலம் துவங்கப்பட உள்ளதால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பு அதில் உள்ளது. எனவே இந்த தண்ணீரை பயன்படுத்திக் கொள்ள மேற்படி இடத்தில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து மின்மோட்டார் பொருத்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,00,000/- செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

15. இந்நகராட்சியில் வீரகனூர் சாலையில் ஒரு எரிவாயு தகன மேடை அமைந்துள்ளது. இந்நகராட்சியில் 33 வார்டு மக்களும் இதனை பயன்படுத்துகின்றனர். கொரோனா காலகட்டத்தில் இந்த ஒரு எரிவாயு தகன மேடையை பயன்படுத்த போதுமானதாக இல்லாமல் சிரமம் ஏற்படுவதால், தற்போது முல்லைவாடி பகுதியில் அமைந்துள்ள மயானத்தில் புதியதாக ஒரு எரிவாயு தகன மேடை அமைத்தல் மூலம் பெருந்தொற்று காலத்தில் பயன்படுத்த ஏதுவாக இருக்கும். எனவே இதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.150.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை வைக்க மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

16. ஆத்தூர் நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமாக உள்ள ஐயனார் கோயில் ஏரியில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்டு Sump உள்ளது. இந்த சப்பிற்கு ஏரியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து எடுத்து Sump–ல் நிறைத்து முல்லைவாடி பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதால், வறட்சி காலத்தை எதிர் கொள்ளவும், கூடுதலாக ஆழ்துளை கிணற்று அமைத்து குழாயி பொருத்தி மோட்டார் இறக்கி குடிநீர் வழங்க மதிப்பீடு தயார் செய்து மதிப்பீட்டு தொகை ரூ.7,30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

17. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 முத்துநகர் பகுதியில் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அந்த பகுதிக்கு முல்லைவாடி OHTல் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. முல்லைவாடி பகுதியில் அதிக அளவில் குடியிருப்புகள் உண்டாகிவிட்ட காரணத்தால் முத்துநகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொழுது சரியான முறையில் சென்றடைவதில்லை. எனவே முத்துநகர் பகுதிக்கு தனியாக முல்லைவாடி OHTல் இல் இருந்து 160 எம்.எம். பி.வி.சி பைப்லைன் அமைத்து சலுஸ் வால்வு பொருத்தி முத்துநகர் பகுதிக்கு குடிநிர் வழங்க மதிப்பீடு ரூ.4,10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

18. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகள் குத்தகைதாரர்களால் ஒப்படைக்கப்பட்டு காலியாக இருந்து வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | குத்தகை இனம் விவரம் |
|---|---|
| 1 | மண்டிகள் மற்றும் அறைகள் மேற்குபுறம் கட்டிடம் |
| 2 | அண்ணா பவளவிழா மேற்குபுறம் கடை எண்.1 |
| 3 | அண்ணா பவளவிழா மேற்குபுறம் கடை எண்.2 |
| 4 | தினசரி அங்காடி கடைஎண்.22 |
| 5 | தினசரி அங்காடி கடைஎண்.31 |
| 6 | தினசரி அங்காடி கடைஎண்.32 |
| 7 | புதிய பேருந்து நிலைய கடை எண்.64 |
| 8 | பழைய பேருந்து நிலைய கிழக்குபுற கட்டிடம் எண்.1 |

மேற்கண்ட கடைகள் காலியாக இருப்பதால் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.கஎண்.262/2022/அ4)

19. ஆத்தூர் நகராட்சி சேலம் – கடலூர் மெயின் ரோடு காதர் பேட்டை அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகராட்சி உருது பள்ளி ஓட்டு கட்டிடம் மிகவும் பழுதுடைந்து இடிந்து விழும் நிலையிலும் மீண்டும் புதிப்பிக்க இயலாத நிலையிலும் உள்ளது . தற்போது மாணவர் சேர்க்கை இல்லாத காரணத்தால் பள்ளிகூடம் மூடப்பட்டு ஐந்து ஆண்டு காலம் ஆகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் அறிவு மையம் (Knowledge Centre) அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதுடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும் அவ்விடத்தில் அறிவு மையம் (Knowledge Centre ) அமைக்க நிர்வாக அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

20. இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் –2022–2023ம் ஆண்டிற்கு சமுதாய கழிப்பிடம் மற்றும் கழிப்பிட பராமரிப்பு பணிகளுக்கு சட்டமன்ற அறிவிப்பில் அறிவுறுத்தியுள்ளவாறு தொடர்ந்து கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | முல்லைவாடி பகுதியில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் | 24.00 |
| 2 | நாடார் காலனி பகுதியில் உள்ள கழிப்பிடம் பராமரிப்பு பணி செய்தல் | 5.00 |

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

21. இந்நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிக்கு ரூ.120.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பழைய பேருந்து நிலையத்தில் மேற்குபுறம் மற்றும் வடக்குபுறம் உள்ள கட்டிடங்களை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் கிழக்கு புறம் இடிந்த நிலையில் உள்ள கட்டிடத்தில் தற்சமயம் 7 எண்ணிக்கை புதியதாக வணிக வளாகம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.120.00 இலட்சத்திற்கு பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

22. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட முல்லைவாடி பகுதியில் உள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இதன் கொள்ளளவு ரூ.4.00 இலட்சம் லிட்டர் குறைந்த உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டியில் இருந்து முல்லைவாடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த குடிநீரில் குளோரின் அளவு சரியான முறையில் கலந்து விநியோகம் செய்ய குளோரின் வாயு செலுத்தி குடிநீர் விநியோகம் செய்ய புதிய தொழில்நுட்ப முறையில் குளோரின் கட்டமைப்பு முல்லைவாடி OHTல் அமைக்க மதிப்பீடு தோராயமாக தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.8,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

23. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட காந்திநகரில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து மக்களுக்கு மேட்டூர் குடிநீர் விநியோகத்தின்போது குளோரின் அளவு சரியான முறையில் கலந்து விநியோகம் செய்ய புதிய தொழில்நுட்ப முறையில் குளோரின் வாயுவை குடிநீர் செலுத்திய குடிநீர் விநியோகம் செய்திட புதிய தொழில்நுட்ப முறையில் குளோரின் கட்டமைப்பு காந்திநகர் குடிநீர் விநியோகம் செய்ய புதிய தொழில்நுட்ப முறையில் குளோரின் கட்டமைப்பு முல்லைவாடி OHTல் அமைக்க மதிப்பீடு தோராயமாக தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.8,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

24. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் உள்ள இரண்டடுக்கு உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இந்த உயர்மட்ட நீர்தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இரண்டடுக்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஒவ்வொன்றும் 7.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாகும். குடிநீர் சுத்தம் செய்யும் குளோரின் அளவு சீராக இருக்கவும், புதிய தொழில்நுட்பத்தில் குளோரினை வாயுமுறையில் நீரில் செலுத்தி குடிநீர் விநியோக செய்திட குளோரின்வாயு கட்டமைப்பு அமைவதற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.8,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

25. ஆத்தூர் நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையாளர், பொறியாளர் மற்றும் துப்பரவு அலுவலர் ஆகியோர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவை பணிகளான குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் திட்ட பணிகள் ஆகியவற்றை அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு கூட்டத்திற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அலுவலக ஆய்வு கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் சென்று கலந்து கொள்ளவும் தற்போது உள்ள வாகனங்கள் போதுமனதாக இல்லாமல் மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், தற்போது ஆத்தூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட TN77 B 5356 என்ற எண் கொண்ட மற்றும் TN77 E 7053 என்ற எண் கொண்ட இரண்டு ஈப்பு வாகனங்கள் (பொலிரோ ஜீப்) ஆகியவை உள்ளது. இவ்வாகனங்களின் பயன்பாட்டு விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | வாகனத்தின் வகை | வண்டி எண். | வாங்கப்பட்ட தேதி | எரிப்பொருள் வகை | ஓட்டப்பட்ட தூரம் கி.மீ | வாகனத்தின் தற்போது நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | BOLERO | TN77 B 5356 | 17.09.2012 | டீசல் | 340767/- | 10 ஆண்டு / 3 இலட்சம் கி.மீ மேல் முடிவடைந்துள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. |
| 2 | BOLERO | TN77 E 7053 | 08.07.2015 | டீசல் | 266375/- | 8 ஆண்டு / 2 இலட்சம் கி.மீ மேல் முடிவடைந்துள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. |

மேற்கண்டவாறு, தற்போது பயன்பாட்டில் உள்ள இரண்டு வாகனங்களின் ஆயுள் காலமான 10 ஆண்டு / 3 இலட்சம் கி.மீ முடிவடைந்து அடிக்கடி பழுது ஏற்பட்டு தகுதியற்ற நிலையில் தொடர்ந்து அதிக செலவு செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதுடன், பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில், ஆத்தூர் நகராட்சியில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவை பணிகளையும் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் புகார்களை ஆய்வு செய்ய போதிய வாகன வசதி இல்லாததால் புதியதாக வாகனங்கள் அரசிடம் பெற்று வாங்குமாறு தொடர்ந்து வழியுறுத்தி வருகின்றனர்.

எனவே, ஆத்தூர் நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையாளர், பொறியாளர்கள் மற்றும் துப்பரவு அலுவலர் ஆகியோர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவை பணிகளை துரிதமாக கண்காணிக்கவும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு கூட்டத்திற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அலுவலக ஆய்வு கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் சென்று கலந்து கொள்ளவும், தேர்வு நிலையில் உள்ள ஆத்தூர் நகராட்சிக்கு புதியதாக 2 எண்ணிக்கையில் SCORPIO புதிய வாகனங்கள் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் மற்றும் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

26. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து கடைவீதி நீர்தேக்க தொட்டிக்கு நீர் உந்து செய்யப்படுகிறது. அவ்வாறு உந்து செய்யப்படும் குடிநீர் சிமெண்ட் குழாய்கள் மூலம் உந்து செய்யப்படுகிறது. இந்த குழாய்கள் அனைத்தும் 1996ம் ஆண்டில் பதிக்கப்பட்டு நீர்உந்து செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் அதிக அளவில் உடைப்புகள் ஏற்படுவதாலும், நீர் அழுத்தம் வேகம் அதிகரிப்பதாலும் குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாகிறது. இதை தடுக்க பழைய சிமெண்ட் குழாயை அகற்றி விட்டு இருப்பில் உள்ள D.I குழாயினை பொருத்தினால் குடிநீர் வீணாவதை தவிர்க்கலாம். இப்பணி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தலைவர், 27/04/22

ஆத்தூர் நகர்மன்றம்.

27-4-22